**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 494** **நாள்: 20.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 16 விடுதிகளுடன் கூடிய கல்வி நிறுவனங்களில் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. இப்பணியில் 289 பணியாளர்கள் மேற்கொண்டனர். 581 கிலோ தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டன. மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் சேப்பாக்கம், விக்டோரியா விடுதியில் நடைபெற்ற டெங்கு தடுப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 3,567 பணியாளர்கள் இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பணிகளை கண்காணித்திட தலைமையிடத்தில் உள்ள இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், வட்டார அளவிலான துணை ஆணையர்கள், மண்டல அலுவலர்கள், மாநகர மற்றும் மண்டல அளவிலான நல அலுவலர்கள் மற்றும் பூச்சி தடுப்பு அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், இன்று (20.09.2026) திருவொற்றியூர் மண்டலத்தில் எர்ணாவூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணலி மண்டலத்தில் மணலி சி.பி.சி.எல் (CPCL) பாலிடெக்னிக், மாதவரம் மண்டலத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், தண்டையார்பேட்டை மண்டலத்தில், சர் தியாகராயா கல்லூரி, இராயபுரம் மண்டலத்தில் எத்திராஜ் கல்லூரி, திரு.வி.க. நகர் மண்டலத்தில் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி, அம்பத்தூர் மண்டலத்தில் பக்தவத்சலம் கல்லூரி, அண்ணாநகர் மண்டலத்தில் வள்ளியம்மாள் கல்லூரி மற்றும் கந்தசாமி கல்லூரி, தேனாம்பேட்டை மண்டலத்தில் விக்டோரியா விடுதி, கோடம்பாக்கம் மண்டலத்தில் மீனாட்சி கல்லூரி, வளசரவாக்கம் மண்டலத்தில் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம், ஆலந்தூர் மண்டலத்தில் ஜெயின் கல்லூரி, அடையாறு மண்டலத்தில் அண்ணா பல்கலைக்கழக விடுதி, பெருங்குடி மண்டலத்தில் பல் மருத்துவமனை மற்றும் ஜெருசலேம் கல்லூரி, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் இந்திய கடல்சார்ப் பல்கலைக்கழகம் ஆகிய 16 விடுதிகளுடன் கூடிய கல்வி நிறுவனங்களில் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. இப்பணியினை 289 பணியாளர்கள் மேற்கொண்டனர். 53 புகைப்பரப்பும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. 581 கிலோ தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டன.

இதில் சேப்பாக்கம் பகுதியில் உள்ள விக்டோரியா விடுதியில் நடைபெற்ற டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள்,

பார்வையிட்டு ஆய்வு செய்து, வளாகத்தில் தேவையற்ற பொருட்களை அகற்றி, சுத்தமாக வைத்துக் கொள்ளவும், கொசுப்புழு உருவாவதைத் தடுத்திடும் வகையில் தண்ணீர் தேங்காமல் அகற்றிடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கு வருகைதரும் பொதுமக்களுக்கும், வீடுகள்தோறும் சென்று பொதுமக்களுக்கும், கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் உரிமையாளர்கள் ஆகியோருக்கு கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி தீவிரமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகள், கிளினிக்குகள், ஆய்வகங்கள், பயிற்சி மையங்கள், வீடுகள் மற்றும் அரசு மையங்களில் இருந்து புகாரளிக்கப்பட்ட காய்ச்சல் விவரங்களை சேகரிப்பதன் மூலம் காய்ச்சல் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகளில் இருந்து வீடு திரும்பிய அனைத்து காய்ச்சல் நோயாளிகளும் 3 நாட்களுக்கு தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**